ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2071/16 - 2018 මැයි මස 15 වැනි අඟහරුවාදා - 2018.05.15

*2071/16 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு மே மாதம் 15 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

***1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, உற்பத்தி (விசேட ஏற்பாடுகள்) சட்டம்***

*3 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*திருத்தப்பட்டவாறு, 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3அ ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் அதே சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைவாக, நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் மங்கள சமரவீர ஆகிய நான், இராஜதந்திரிகள் அல்லது இங்கு தாபிக்கப்பட்டுள்ள இராஜதந்திர அமைப்புக்களினால் 100% தீர்வை அல்லது வரிச் சலுகை அடிப்படையில் இறக்குமதி செய்யப்பட்ட அல்லது உள்நாட்டில் கொள்வனவு செய்யப்பட்ட மோட்டார் வாகனங்களின் விற்பனை அல்லது அகற்றுதல் தொடர்பில் செலுத்தத்தக்க உற்பத்தித் தீர்வையினை தீர்மானிப்பதற்கான ஒரு வழிமுறையாக கொள்ளப்படுதல் வேண்டுமெனவும்,*

*இராஜதந்திரிகள் அல்லது இங்கு தாபிக்கப்பட்டுள்ள இராஜதந்திர அமைப்புக்களினால் 100% தீர்வை அல்லது வரிச் சலுகை அடிப்படையில் இறக்குமதி செய்யப்பட்ட அல்லது உள்நாட்டில் கொள்வனவு செய்யப்பட்ட மோட்டார் வாகனங்களை விற்பனை செய்கையில் அல்லது அகற்றுகையில் அவற்றுக்கு செலுத்தத்தக்க அரசிறை அறவீடுகளானவை, அத்தகைய வாகனங்களின் பயன்பாட்டினை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் அட்டவணையில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ளவாறு, குறித்த வாகனம் இறக்குமதி செய்யப்படுகையில் செலுத்தத்தக்க உற்பத்தித் தீர்வையின் சதவீதமாகக் கொள்ளப்படுதல் வேண்டுமெனவும்,*

*முதற் பதிவுத் திகதிக்கும் மற்றும் குறித்த வாகனத்தின் விற்பனை அல்லது அகற்றல் திகதிக்கும் இடைப்பட்ட காலம், அந்த வாகனத்தின் பயன்பாட்டுக் காலத்தினைக் கணிப்பீடு செய்வதற்கான காலமாகவும், 2015 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 21 ஆந் திகதி அல்லது அதற்குப் பின்னர் குறித்த இராஜதந்திரிகள் அல்லது இங்கு தாபிக்கப்பட்டுள்ள இராஜதந்திர அமைப்புக்களினால் இறக்குமதி செய்யப்பட்டு அல்லது உள்நாட்டில் கொள்வனவு செய்யப்பட்டு குறித்த இராஜதந்திரிகள் அல்லது இங்கு தாபிக்கப்பட்டுள்ள இராஜதந்திர அமைப்புக்களின் பெயரிலேயே பதிவுசெய்யப்பட்டு விற்பனை செய்யப்படுகையில் அல்லது அகற்றுகையில், இக்கட்டளையினை ஏற்புடைமையாக்கிக்கொள்ளப்படுதல் வேண்டும் எனவும், இக்கட்டளை மூலம் நான் பிரகடனப்படுத்துகிறேன்.*

*மங்கள சமரவீர,*
*நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்.*

*நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சு,*
*கொழும்பு 01,*
*2018, மே 15.*

1A - PG 4042 — 557 (2018/05)

இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

**அட்டவணை**

| *இராஜதந்திரி/இராஜதந்திர அமைப்பினால் முதற்பதிவுத் திகதி முதல் பயன்படுத்தப்பட்ட காலம்* | *உற்பத்தித் தீர்வை வீதம்* |
|---|---|
| 01 வருடத்திற்கு மேற்படாதவை | செலுத்தத்தக்க உற்பத்தித் தீர்வையின் 85% |
| 01 வருடத்திற்கு மேற்பட்டவை மற்றும் 02 வருடங்களுக்கு மேற்படாதவை அல்லது அதற்குச் சமமானவை | செலுத்தத்தக்க உற்பத்தித் தீர்வையின் 75% |
| 02 வருடத்திற்கு மேற்பட்டவை மற்றும் 03 வருடங்களுக்கு மேற்படாதவை அல்லது அதற்குச் சமமானவை | செலுத்தத்தக்க உற்பத்தித் தீர்வையின் 65% |
| 03 வருடத்திற்கு மேற்பட்டவை மற்றும் 04 வருடங்களுக்கு மேற்படாதவை அல்லது அதற்குச் சமமானவை | செலுத்தத்தக்க உற்பத்தித் தீர்வையின் 55% |
| 04 வருடத்திற்கு மேற்பட்டவை மற்றும் 05 வருடங்களுக்கு மேற்படாதவை அல்லது அதற்குச் சமமானவை | செலுத்தத்தக்க உற்பத்தித் தீர்வையின் 45% |
| 05 வருடத்திற்கு மேற்பட்டவை மற்றும் 06 வருடங்களுக்கு மேற்படாதவை அல்லது அதற்குச் சமமானவை | செலுத்தத்தக்க உற்பத்தித் தீர்வையின் 35% |
| 06 வருடத்திற்கு மேற்பட்டவை மற்றும் 07 வருடங்களுக்கு மேற்படாதவை அல்லது அதற்குச் சமமானவை | செலுத்தத்தக்க உற்பத்தித் தீர்வையின் 25% |
| 07 வருடத்திற்கு மேற்பட்டவை மற்றும் 08 வருடங்களுக்கு மேற்படாதவை அல்லது அதற்குச் சமமானவை | செலுத்தத்தக்க உற்பத்தித் தீர்வையின் 15% |
| 08 வருடங்களுக்கு மேற்பட்டவை | செலுத்தத்தக்க உற்பத்தித் தீர்வையின் 10% |

*06-113*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.